Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.11**

Defence

Court

| | |
|---|---|
| Name | **விக்னேஷ்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 6th day of January 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 6th day of January 2026.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பம், வண்ணான்குட்டையில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்து போன அரவிந்தை எனக்கு தெரியும். எதிரி பாலாஜியை எனக்கு தெரியும். இருவரும் எங்கள் பகுதியை சேர்ந்தவர்கள். 26.01.2025 அன்று அரவிந்துக்கு அடிப்பட்டுவிட்டது என்று கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மதியம் 1.00 மணியளவில் நானும் வினோத்குமாரும் சென்று பார்த்தோம். அரவிந்த் இறந்து விட்டதாக சொன்னார்கள். பாலாஜி அங்கு சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு பார்க்க சென்றோம். அப்போது காவல் துறை ஆய்வாளரிடம் பாலாஜி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதனை மடிக்கணினியில் தட்டச்சு செய்தார்கள். பின்னர் அதில் என்னையும், வினோத்குமாரையும் சாட்சியாக இருந்து கையொப்பம் போட சொன்னார்கள். **காண்பிக்கப்பட்ட எதிரி பாலாஜி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது அது அதசாஆ 4 ஆகும்.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்தின் போது பயன்படுத்திய கத்தி மற்றும் Honda இருசக்கர வாகனத்தையும் மஞ்சக்குப்பம் Training School பின்புறம் இருப்பதாக அவர் கூறினார். **ஒப்புதல்வாக்குமூலத்தில் " கத்தியுடன் நான் எடுத்து வந்த PY 01 VA 8852 Honda CLI - Q ...... வைத்து பூட்டி விட்டு" மற்றும் " நான் சிகிச்சையில் இ,ருப்பதால் ..... தாங்களே சென்று எடுத்துக்கொள்ளலாம் " என்ற பகுதி**

**அதசாஆ 5 மற்றும் 6 ஆகும். எதிரி பாலாஜி அளித்த மேற்சொன்ன வாக்குமூலத்தின் அடிப்படையில் மஞ்சக்குப்பம் Training School க்கு சென்று அங்கு சான்று பொருள் 1 மற்றும் 2 கத்தியையும் மேற்சொன்ன வாகனத்தையும் ஆய்வாளர் என் முன்னிலையிலும், வினோத்குமார் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 7 ஆகும்.** அதில் நானும் வினோத்குமாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

நான் கடலூர் அரசு மருத்துவமணைக்கு மதியம் 1.00 மணிக்கு சென்றேன். எதிரி பாலாஜி வாக்குமூலம் அளித்த சமயத்தில் மருத்துவர்கள் உடன் இருந்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை கடலூர் அரசு மருத்துவமணையில் நான் செய்தேன். இறந்த அரவிந்தின் பிரேதத்தை நான் கடலூர் மருத்துவமணையில் பார்க்கவில்லை. மதியம் 11.00 மணிக்கு அரவிந்த் அடிப்பட்ட விவரம் எனக்கு தெரிய வந்தது. பாலாஜியை ICU வார்டில் பார்த்தேன். கடலூர் அரசு மருத்துவமணையில் சம்பவயிடத்திற்கு 10 நிமிடத்தில் சென்று விடலாம். நான் ஒப்புதல்வாக்குமூலத்தில் கையொப்பம் செய்த சமயத்தில் மதியம் 1.30 மணி இருக்கும். எத்தனை மணிக்கு Training School பின்புறம் போலிசார் என்னை அழைத்து சென்றார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை,. நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள விவரம் தற்போது எனக்கு ஞாபகம்

இல்லை. அதசாஆ 7 கைப்பற்றுதல் மகஜர் மதியம் 2.45 மணிக்கு நான் கையொப்பம் செய்தேன். வண்டியை எடுக்க போன விவரம் அதசாஆ 7 கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலூர் புதுநகர் போலிசார் அழைத்துசென்றார்கள். அதில் குறிப்பிட்டு எந்த போலிசார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 2 வது ஆக சாட்சி கையொப்பம் செய்த வினோத்குமார் எங்களுடன் பூக்கடையில் வேலை செய்பவர். ஒப்புதல்வாக்குமூலத்திலம் அதசாஆ 7 கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள எங்கள் இருவர் கையொப்பமும் வித்தியாசமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. முதலாவது உள்ள 2 கையொப்பங்களும் என்னுடையது தான். அதசாஆ 7 கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள கத்தியின் அளவு எனக்கு ஞாபகம் இல்லை. ஒரு கத்தி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. இருசக்கர வாகனத்தின் Chassis Number எனக்கு ஞாபகம் இல்லை. நானும் இறந்த அரவிந்தும் ஒன்றாக மஞ்சக்குப்பத்தில் வேலை செய்தவர்கள். தற்போது கடலூர் பேருந்து நிறுத்தத்தில் பூ கடையில் வேலை செய்கிறேன். நான் கடலூர் திருப்பாதிரிபூலியுரில் உள்ள பூ கடையில் தான் வேலை செய்கிறேன் என்றாலும் எப்போதும் மஞ்சக்குப்பம் பூ கடையில் வேலை செய்ததது இல்லை என்றால் சரியல்ல. எதிரி பாலாஜி போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்த சமயத்தில் தனது அப்பா பெயர் என என்ன கூறினார் என்று ஞாபகம் இல்லை. எனக்கு எந்த விவரங்களும் தெரியாது என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் எதிரி தாமாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்ததாகவும் சான்று பொருட்கள் கைப்பற்றியதாகவும் பொய்யாக

சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த விவரங்களும் தெரியாது என்ற காரணத்தினால் தான் எல்லா கேள்விகளுக்கும் எனக்கு ஞாபகம் இல்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.12**

Defence

Court

| | |
|---|---|
| Name | திருமதி. ராஜ ராஜேஸ்வரி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 6th day of January 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 6th day of January 2026.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி மின் பொறியாளராக கடலூர் மஞ்சக்குப்பம் பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். 2 ஆண்டுகளாக மஞ்சக்குப்பம் பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். **கடலூர் புதுநகர் காவல் ஆய்வாளர் கொடுத்த கடிதம் முன்னிலைக்கு பரமசிவம் நகரில் எந்த வித மின் தடையும் இல்லை என நான் சான்று வழங்கினேன். அந்த சான்று அதசாஆ 8 ஆகும்.** இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

பரமசிவம் நகருக்கு நான் சென்றுள்ளேன். சம்பவயிடத்தை போலிசார் என்னை அழைத்து சென்று காண்பிக்கவில்லை. பரமசிவம் நகரில் உள்ள ஒரு தெருவை மட்டும் நான் மின்தடை இருந்தததா என ஆய்வு செய்து சான்று கொடுத்தேன். அந்த தெருவின் பெயர் பரமசிவம் தெரு தான்அந்த பகுதியை சேட்டுமண் என குறிப்பிடுவார்கள். பரமசிவம் நகரில் சின்னசாமி காலிமனை பகுதியில் மின்தடை இருந்ததா என கேட்டார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது சான்றில் பார்வை என குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தை போலிசார் என்னிடம் இருந்து திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை. E.B Post எண்கள் குறிப்பிட்டு நான் சான்று வழங்கவில்லை என்றால் போலிசார் கொடுத்த கடிதத்தில் (பார்வையில் சொல்லப்பட்டுள்ள கடிதம்) அவ்வாறு குறிப்பிட்டு கேட்காததால் நான் சான்று

வழங்கவில்லை. மேற்சொன்ன பரமசிவம் நகரில் எத்தனை E.B Post கள் உள்ளது என்று தற்போது என்னால் சொல்ல இயலாது. எத்தனை மின்விளக்குகள் உள்ளன என்பது Municipality க்கு தான் தெரியும். இந்த வழக்கு சம்பவயிடத்தில் E.B Post மற்றும் மின்விளக்குகள் எதுவும் இல்லை என்றாலும் எனவே பரமசிவம் நகரில் மின்தடை இல்லை என பொதுவாக நான் கொடுத்த சான்று எந்த வகையிலும் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the*
*Witness. Admitted and acknowledged*
*by him/ her to be Correct.*
*Sd/-Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*